வெற்றி நிச்சயம்

15 நாள் செயல்த்திட்டம் 2022

புலமை ஒளி

தமிழ்



PN.Siva (NDT Merit B.A M.A)

0779500691

தொடர் பயிற்சி வெற்றிதரும்! இன்றே ஆரம்பியுங்கள் !

2022.12.18 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்காள்ளும் மாணவர்களுக்கான 15 நாள் செயல்திட்டம்

முயற்சிகள் தவறலாம்
முயற்சிக்கத் தவறாதே





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

Tamil Gr 5 Exam 01 (2022) முதலாம் நாள்

01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

விடியற்காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறு எனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத் தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

பந்தியை துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) விடியற் காலையை எதிர்பார்த்திருந்தோர் யாவர்? .....

(ii) பந்தியில் வந்துள்ள அடுக்குத் தொடரினை எழுதுக. .....

(iii) 'கழனி' என்பதன் ஒத்த சொல்லினை எழுதுக. .....

(iv) பந்தியில் உள்ள இரட்டைக்கிளவியை எழுதுக. .....

(v) உயர்திணை, பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக. .....

(vi) ஊழியர்கள் வேலையைத் தொடங்க எவ்வாறான ஆடைகளுடன் விரைகின்றனர்?

.....

02) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(i) இரக்கப் போனாலும் ..... போ.

(ii) முற்பகல் செய்யிற் பிற்பகல் .....

03) அ.ஃறிணைப் படர்க்கை ஒருமைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) அதிபர் (2) மேசை (3) மரங்கள்

04) பின்வரும் பிராணிகளுக்குரிய தொனிகளை எழுதுக.

(i) குரங்கு : .....

(ii) ஆந்தை : .....

05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✗" எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) மீன்கள் குளத்தில் நீந்தியது. (.....)

(ii) இரவில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னின. (.....)

(iii) கிளிகள் பழத்தைக் கொத்தும். (.....)

www.lkedu.lk

06) கீழே தரப்பட்டுள்ள தொடர்மொழிக்குரிய பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) வீண் செலவு செய்பவன்..... (வள்ளல் / ஊதாரி)

(ii) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் ..... (வேட்பாளர் / அமைச்சர்)

07) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான இணைமொழியை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

பெண்கள் வயலில் ..... வேலை செய்தனர். (ஆறு அமர / ஓடி ஆடி)

08) சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தொழிலாழி தொளிலாழி தொழிலாளி

(ii) ஆராய்ச்சி ஆராட்சி ஆராச்சி

09) கீழே தரப்பட்டுள்ள பிராணியின் இளமைப் பெயரினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

கீரி : .....

10) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) வேடன் எய்த ..... குறி தவறிச் சென்றது. (பானம் / பாணம்)

(ii) மலை முகட்டில் ..... படர்ந்திருந்தது. (பணி / பனி)

Tamil Gr 5 Exam 02 (2022) இரண்டாம் நாள்

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

மனிதன் உட்பட ஒவ்வொரு ஜீவராசியும் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. சுவையான உணவை உண்பதைவிட சத்தான உணவை உண்பதே சிறந்ததாகும். உணவு இல்லையேல் உடல் சோர்வடைந்துவிடும். உடலில் சக்தி உற்பத்தியாவதற்கும் உடல் அங்கங்கள் ஆரோக்கியமாகச் செயற்படுவதற்கும் உணவே காரணமாகின்றது நாம் காலை உணவைத் தவிர்க்காமல் உண்ண வேண்டும். அது மட்டுமல்லாது இரசாயன உணவுகளைத் தவிர்த்து இயற்கையான உணவுகளை உண்ணுதல் மூலம் நோய்நொடி ஏற்படாமல் நீண்டகாலம் சிறப்பாக வாழ முடியும்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) மனிதன் உட்பட ஒவ்வொரு ஜீவராசியும் உயிர் வாழ்வதற்கு அவசியமானது எது?

.....

(ii) மேனி என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

.....

(iii) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.

.....

(iv) இணைமொழி ஒன்றினைத் தருக.

.....

(v) காலப்பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

.....

(vi) செயற்கையான என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.....

ikedu.lk

02. அ.ற்றிணை இறந்தகால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பறந்தன　　2. சென்றது　　3. வந்தாள்

03. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

நல்ல / நித்திரை / பழக்கம் / ஆகும் / விட்டெழுவது / அதிகாலையில்

……..

04. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

ஆசிரியர் சிற்பங்களைத் தொட வேண்டாம் என்று கூறினார்

05. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) ஒவ்வொரு பூவும் அழகானது. (　　)

(ii) குயில்கள் இனிமையாகக் கூவியது. (　　)

(iii) அவள் கலகலவென்று சிரித்தாள். (　　)

(iv) குருவி தானியங்களைக் கொத்தித் தின்றன. (　　)

---

06. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) சிகிரியா ஓவியங்கள்……(பழமை / பழைமை) வாய்ந்தன.

(ii) அம்மா உணவு சமைப்பதற்கு……..……(எண்ணெய் / எண்ணை) பயன்படுத்தினார்.

07. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) சிறுவயதுப் பழக்கம் நீங்காது

……

(ii) பின்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

ஆற்றிலே போட்டாலும் …… போடு

08. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.

(i) நூலாசிரியர் ஒருவர் தாமியற்றிய நூலின் முன்னே தனது நூலைப்பற்றிக் கூறும் உரை

……

(ii) ஒன்றைப் போல் இருக்கும் மற்றொன்று

……

09. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(i) கதை வளர்த்தல் : ……..

(ii) தட்டிக் கொடுத்தல் : ……..

உயர்ச்சியடைதல் / உற்சாகப்படுத்துதல் / பேச்சை விரித்தல் / சாக்குப்போக்குச்சொல்லுதல்

Tamil Gr 5 Exam 03 (2022) மூன்றாம் நாள்

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

"ஐயனே! தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும். தங்களுக்குத் தொண்டு செய்ய அடியேனும் ஐயாயிரம் வேடர்களும் இருக்கின்றோம். கங்கைக்கரை சுகமான இருப்பிடம், இங்கு பூசைக்குத் தேவையான நறுமணம் நிரம்பிய மலர்கள் இருக்கின்றன, நல்ல நல்ல போர்வைகள் இருக்கின்றன, இனிய கனிகள் இருக்கின்றன, பகைவரை வெல்லுவேன், கிழங்குகளைக் கொணர்வேன், எட்டுத் திசைகட்கும் வழி சொல்லுவேன்! அடியேன் எல்லாத் தொண்டுகளையும் அன்புடன் செய்வேன், ஆதலால் இங்கேயே இருக்க வேண்டும்" என்று உள்ளம் உருகி உரைத்தான்.

- பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

i. சுகமான இருப்பிடம் எது என்று கூறப்பட்டுள்ளது?

.....

ii. இராமனுக்கு தொண்டு செய்ய எத்தனை வேடர்கள் இருக்கின்றனர்?

.....

iii. "நண்பரை" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.

.....

iv. அடுக்கு மொழி ஒன்றினைத் தருக.

.....

v. "திக்கு" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

.....

vi. "கூறினான்" என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

.....

02. உயர்திணை இறந்தகால பன்மை வினைச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. பறந்தது 2. வருவான் 3. படித்தார்கள்

03. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

தனது / மகாத்மாகாந்தி / வாழ்க்கையில் / சத்தியத்தைத் / இடம்பிடித்தார் / கடைப்பிடித்து / வரலாற்றில்

.....

04. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் நம் முன்னோர்

05. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியாக எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. அன்று தொட்டு இன்று வரை ..... (நாகரீகம், நாகரிகம்) மாற்றமடைந்து வருகிறது.

ii. அவள் புதுவருட தினத்திற்கு ..... (புடைவை, புடவை) கடையில் ஆடை வாங்கினாள்.

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

06. **பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

.....

ii. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

சிறுதுளி பெரு .....

07. **பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i. குன்றும் .....

ii. பேரும் .....

08. **பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.**

i. அறிஞர் வாதிடும் களம் .....

ii. இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை .....

09. **பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

மரத்தினது வேர் நீரை நாடிச் சென்றது.

.....

10. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✗" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i. கிராமியப் பாடல்கள் கலை நயம் மிக்கது. ( )

ii. குருவிக் கூட்டம் வானத்தில் பறந்தன. ( )

iii. நகமும் சதையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. ( )

iv. நான் தம்பியுடன் கடைக்குப் போனேன். ( )

Tamil Gr 5 Exam 04 (2022) நான்காம் நாள்

1. **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

பல வர்ண மின்விளக்குகள் காலி முகத்திடலைச் சொர்க்க புரியாக மாற்றிக் கொண்டிருந்தன. பட்டம் விடும் சிறுவர்கள் இந்த வர்ண ஒளியில் பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள். வானளாவிப் பறந்த அப்பட்டங்கள் வானில் தெரியும் பல வர்ணத் தாரகைகள் போன்று தென்பட்டன. மாலைப் பொழுது விடைபெற்றுக் கொண்ட போதும் காலி முகத்திடலை விட்டுப் பிரிய மனமின்றிப் பலர் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தனர். கடல் நீரும் நீலவானும் கைகோர்க்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் நானும் இருப்பிடம் நோக்கிப் பயணமானேன்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. காலி முகத்திடலைச் சொர்க்க புரியாக மாற்றிக் கொண்டிருந்தவை எவை?

.....

ii. சிறுவர்கள் எங்கே பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள்?

.....

iii. நட்சத்திரங்கள் என்பதன் ஒத்தகருத்தைக் குறிப்பிடுவதாகப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

iv. பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.

.....

v. காலப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

.....

vi. நான் எந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் இருப்பிடம் நோக்கிப் பயணமானேன்?

.....

2. **பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.**
நூலகத்திலுள்ள புத்தகங்களை ஒலிப்படம் எடுப்பது தண்டணைக்குரிய குற்றமாகும்.

.....

.....

3. **பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி எதிர்கால வினைச் சொல் சேர்த்து வாக்கியங்களை மீண்டும் எழுதுக.**
i. பருந்து வானத்தில வட்டமிடுகின்றது.

.....

ii. சிறுவர்கள் கடற்கரையிலை சென்று பட்டம் விடுகின்றார்கள்.

.....

4. **கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.**
i. எங்களால் / இரண்டு / நகருக்குள் / காண முடிந்தது / காலி / அம்சங்களை / நுழைந்ததுமே

.....

ii. ஒரு / கருத்துக்களைக் / நல்ல / நூலாகும் / ஆத்திசூடி / பல / கூறுகின்ற

.....

5. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார்

6. **பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கீறிட்ட இடங்களில் எழுதுக.**
i. நாக்குப்புரளுதல்.....

ii. வாயூறுதல் .....

7. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✕" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**
i. ஆடுகள் வயலை நோக்கிச் செல்லும். ( )

ii. ஒவ்வொரு புத்தகமும் நல்லவை. ( )

iii. குரங்குகள் மரத்திற்கு மரம் தாவுகின்றது. ( )

iv. மல்லிகைக் கொடியினது பூக்கள் மணம் வீசின. ( )

8. **பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**
கடனில்லாத கஞ்சி கால் வயிறு போதும்.

.....

9. **பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.**

(கையும் மெய்யும், ஓடி ஆடி, அக்கம் பக்கம், இன்ப துன்ப)

i. பெண்கள் வயலில் .....வேலை செய்தனர்.

ii. நாங்கள் உற்றார் உறவினர்களின் ..... நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

10. **பின்வரும் வாக்கியத்தை ஒன்றன் பால் ஒருமை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.**
இந்த மாம்பழங்கள் மிகவும் சுவையாக இருக்கின்றன.

.....

Tamil Gr 5 Exam 05 (2022) ஐந்தாம் நாள்

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

அவை அழகான கோழிக்குஞ்சுகள். தோட்டத்தில் அங்குமிங்கும் உலவித் திரிந்தன. கொக்...கொக்... என்று சத்தமிட்டன. தமது சிறிய சிறகுகளை அடித்தவாறு தாயின் பின்னே விரைவாக ஓடின. பசுத்தோல் போர்த்த புலி போல உலவும் விலங்குகளால் ஆபத்து என்பதை அவை அறியவில்லை. தொடர்ந்து அக்குஞ்சுகள் பசும் புல்வெளிக்குச் சென்று உலவின. அதனைப் புல்வெளிக்கு அப்பாலே உள்ள பற்றைக்குள் இருந்த கீரி பார்த்தது. அவற்றைப் பிடிக்க நினைத்து வேகமாகத் துரத்தத் தொடங்கியது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. தோட்டத்தில் உலவித் திரிந்தவை எவை?

.....

ii. பந்தியில் உள்ள இணைமொழி ஒன்றினைத் தருக.

.....

iii. பந்தியில் உள்ள உவமைத்தொடர் யாது?

.....

iv. ஒலியெழுப்பின என்பதைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

v. பந்தியில் இடம்பெற்றுள்ள சினைப் பெயர்ச் சொல் ஒன்றைத் தருக.

.....

vi. இப் பந்தியில் கூறப்படாத கருத்தின் கீழ்க் கோடிடுக.

(1) கோழிக்குஞ்சுகள் தோட்டத்தில் உலவித் திரிந்தன.

(2) கோழிக்குஞ்சுகள் புல்வெளியில் உலவித் திரிந்தன.

(3) கீரி புல்வெளியில் உலவித் திரிந்தது.

2. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக்கி எழுதுக.

நான் கடைக்குச் சென்றேன்.
நான் புத்தகம் வாங்கினேன்.

.....

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக

மனனம் / ஆத்திசூடியானது / செய்யக்கூடிய / வகையில் / சிறுவர்களும் / எவ்வயதுச் / சிறுசிறு / அமைந்துள்ளது / சொற்றொடர்களாக

.....

.....

4. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி மீண்டும் எழுதுக.

i. நாங்க வீட்டை போறம்.

.....

ii. அவையள் என்ர புதிய புத்தகத்த வேண்டினார்கள்.

.....

www.ikeau.lk

5. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.**

மலரவா நீ வீட்டு வேலைகளைச் செய்தாயா

6. **பின்வரும் ஒவ்வொரு கருத்தினையும் உணர்த்தும் பொருத்தமான மரபுத் தொடரினைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

i. அலைத்து வருத்துதல் .....

ii. மனம் நோகப் பேசுதல் .....

7. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✕" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i. நானும் தம்பியும் பூங்காவிற்குச் சென்று விளையாடினோம். ( )

ii. மயில் குழாம் அழகாகத் தோகை விரித்து ஆடின. ( )

iii. எமக்கு கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள் போன்றது. ( )

iv. மரத்தினது இலைகள் கீழே விழுந்தன. ( )

8. **பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

காலம் மாறி வரும்.

.....

9. **பின்வரும் ஒருமை வாக்கியங்களை எதிர்காலப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

i. மீன் நீரில் வாழ்கின்றது.

.....

ii. பசு பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைத் தருகிறது.

.....

10. **பின்வரும் ஒவ்வொரு ஆத்திசூடி வரிகளையும் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.**

i. தேசத்தோடு ஒட்டி .....

ii. இணக்கம் அறிந்து .....

"வாய்ப்புக்காக காத்திருக்காதே !
உனக்கான வாய்ப்பை நீயே
ஏற்படுத்திக்கொள்"

~அப்துல்கலாம்~

www.ikedu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

Tamil Gr 5 Exam 06 (2022) ஆறாம் நாள்

அது ஓர் அழகான கடற்கரை. பரந்து விரிந்த வெண்மணலில் கால்கள் புதையும்படியாக சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். குளிர்காற்று சிலுசிலு என இதமாக வீசியது. சிறு நண்டுகள் மணலில் வரைந்த படங்களை அலைகள் இடையிடையே அழித்துச் சென்றன. தொலைவில் தெரிந்த அடிவானில் பரிதி கடலினுள் மூழ்கத்தொடங்கியது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. இப்பந்தியில் குறிப்பிடப்படும் ஒரு நாளின் பொழுதினைக் கீழே தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) காலைப்பொழுது (2) மாலைப்பொழுது (3) இரவுப்பொழுது

ii. இதமாக வீசியது எது?

.....

iii. நண்டுகள் வரைந்த படங்களை அழித்துச் சென்றவை எவை?

.....

iv. "கீறிய" என்பதைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

v. பந்தியில் இடம்பெற்றுள்ள இரட்டைக் கிளவி ஒன்றைத் தருக.

.....

vi. உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைச்சொல் ஒன்று தருக.

.....

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களிலுள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.

முதலாம் தவனைப் பரீற்சை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

.....

3. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி இறந்தகால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

i. நான் வீட்டிலை இருக்கிறேன்.

.....

ii. குமார் மைதானத்தில் சென்று கரப்பந்து விளையாடுகின்றான்.

.....

4. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

சந்தைகள் பூங்காக்கள் வைத்தியசாலை என்பன பொதுச்சொத்துக்கள் ஆகும்

www.lkedu.lk

5. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

i. மனிதர்கள் /பணம்/ இன்றைய / விரும்புகின்றனர் / அனைவரும் / சம்பாதிக்கவே / உலகில்

.....

.....

ii. கடமை/வழங்கப்படும்/ உங்கள்/ பாதுகாக்க /புத்தகங்களை /இலவசமாக / ஆகும்/ வேண்டியது

.....

.....

6. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✕" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

i. கிளிக்குஞ்சுகள் மரப்பொந்தில் இருந்தது. ( )

ii. நானும் அம்மாவும் தினமும் கோயிலுக்குச் செல்கின்றோம். ( )

iii. அப்பா சந்தைக்குச் சென்று காய்கறிகள் வாங்கினார். ( )

iv. அமாவாசை தினத்தில் பல பறவைகள் பறக்கும். ( )

7. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. தட்டிக்கொடுத்தல் : .....

ii. கங்கணங்கட்டுதல் : .....

8. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியை புள்ளிக்கோட்டில் எழுதுக.

திருப்தியற்ற மனம் : .....

9. கட்டத்தினுள் இணைமொழிகளில் மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

குப்பை கூளங்களை , பேரும் புகழும் , குன்றும் குழியுமாக , அங்குமிங்கும்

i. வீதிகள் எங்கும் குப்பைகள் .....பரந்து காணப்பட்டன.

ii. நாம் .....சேர்த்துக் கூட்டெரு தயாரித்தோம்.

10. பின்வரும் வாக்கியத்தை பெண்பால் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

தம்பி மாலையில் கடற்கரையில் விளையாடினான்.

.....

"எதிர்கால மகிழ்ச்சிக்கு
கல்வியே ஆதாரம்"





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

Tamil Gr 5 Exam 07 (2022) ஏழாம் நாள்

அழகான பட்டம் ஒன்றைக் கட்டிய பிரஜா அதனைப் பறக்க விடுவதற்கு தனது நண்பனான சுதனுடன் விளையாட்டு மைதானத்திற்குச் சென்றான். பிரஜா தான் கட்டிய பட்டத்தை வானத்தில் பறக்க விட்டான். காற்றுப் பலமாக வீசியதால் பட்டம் உயர உயரப் பறந்தது. அதனைப் பார்த்து இருவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். பட்டம் பறந்து கொண்டிருக்கும்போது வெளிவந்த ஓசை யாழ் வாசிப்பது போல் அவர்களின் செவிகளில் ஒலித்தது. பட்டத்தைப் பார்க்கும்போது வண்ணப் பறவையொன்று வானில் பறப்பது போல் காட்சியளிப்பதாக சுதன் பிரஜாவிடம் கூறினான்.

❖ **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) பிரஜா தான் கட்டிய பட்டத்தைப் பறக்க விடுவதற்கு தனது நண்பனான சுதனுடன் எங்கே சென்றான்?

.....

(ii) பட்டம் பறந்து கொண்டிருக்கும் போது வெளிவந்த ஓசை அவர்களின் செவிகளில் எவ்வாறு ஒலித்தது?

.....

(iii) 'அளவற்ற' என்பதைக் காட்டுவதற்கு பந்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?

.....

(vi) வண்ணப் பறவையொன்று வானில் பறப்பது போல் பட்டம் காட்சியளிப்பதாக சுதன் யாரிடம் கூறினான்?

.....

(v) "பகைவனான" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக?

AptitudeExam

.....

(vi) அடுக்குமொழி ஒன்றை எழுதுக.

.....

2. உயர்திணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) அவர்கள் (2) மாணவன் (3) அலுமாரி

3. **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

ஒரு / என்னைச் / கருமையான / சூழ்ந்து / ஏற்பாடு / சுற்றிலும் / செய்துள்ளேன் / கொள்ளும்படி /மேகம்

.....

.....

4. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.**

குடபுலவியனார் என்ற புலவர் உணவெனப்படுவது நிலத்தொடு நீரே என்கிறார்

5. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் பிழை (✗) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

(i) கொக்குகள் மீனைக் கொத்துகின்றது. ( )

(ii) சிறுமியர் சிலர் பொம்மை செய்தனர். ( )

(iii) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ஒளிந்தது. ( )

(iv) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் மலர்ந்தது. ( )

6. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

நோயற்ற..... குறைவற்ற செல்வம்.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

அதிக ஆசை அழிவைத் தரும்

.....

7. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) காகம் அங்குமிங்கும்..... (இரை / இறை) தேடியது.

AptitudeExam

(ii) இலவசப் பாடநூல்களைக் கவனமாகப் பேணிப் பாதுகாப்பது மாணவர்களின்..... (கடைமை / கடமை) ஆகும்.

8. பின்வரும் மரபுத் தொடர்களுக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.

(i) பூசி மெழுகுதல் - .....

(ii) எதிர் நீச்சல் - .....

9. **பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.**

(வரவு செலவு, நகமும் சதையும், ஏறக்குறைய, உற்றார் உறவினர்)

(i) தந்தை சித்திரை மாத இறுதியில் ..... விபரங்களைக் கணக்கிட்டார்.

(ii) அவளுக்கு..... எவருமில்லை.

10. பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியாக்கி இறந்தகால வினைச் சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.
அவள் பென்சில் வேண்டுகின்றாள்.

.....

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

Tamil Gr 5 Exam 08 (2022) எட்டாம் நாள்

வனங்கள் வனப்பு மிக்கவை. உயர்ந்த மரங்களும் அடர்ந்த புதர்களும் அங்கு காணப்படும். பறவைகள் கானமிசைத்தபடி பறந்துவரும். அருவிகள் சலசலத்து ஓடும். மான்களும் எருமைகளும் நீரருந்துவதற்காக அருவிக் கரைக்கு வரும். தெளித்துவிட்ட வண்ணக் கலவை போலப் பூவினங்கள் காட்சி தரும். இது இயற்கை அன்னை நமக்களித்த கண்கவர் காட்சியாகும். வனத்தினுள் நுழைபவரைக் குளிர்காற்று வருடிச் செல்லும். அந்த வருடலோடு நாமும் வனத்தை ரசிக்க முடியும்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) கானமிசைப்பவை எவை? : .....

(ii) மான்களும் எருமைகளும் அருவிக் கரைக்கு வரக் காரணம் யாது?

: .....

(iii) பூவினங்கள் எதைப் போலக் காட்சி தரும்?

: .....

(iv) 'அழகு' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.: .....

(v) இங்கு தாயாகக் குறிப்பிடப்படுவது எது?

: .....

(vi) வனத்தினுள் நுழைபவரை வருடிச் செல்வது யாது? : .....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் **உள்ள சரியான எழுத்துக் கூட்டல்** உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அரசன், ஓர் ஒற்றனை (உழவு / உளவு) பார்க்க அனுப்பினான்.

(ii) மைதானத்தைச் சுற்றி (சிவப்பு / சிகப்பு) நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

3. படர்க்கைப் பன்மை நிகழ்காலச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) உண்டது (2) ஓடுகின்றன (3) எழுதுகின்றான்

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

பின்னர் / சிறிது / உடம்புக்கு / உலவுவது / உணவு / தூரம் / நல்லது / உண்ட

.....

.....

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) காலையில் சேவல் ..... (கூவியது / கூவின)

(ii) காற்று வீசியதால் மரங்கள் ..... (அசைந்தது / அசைந்தன)

(iii) தீமை செய்வோர் ..... (துன்பப்படுவர் / துன்பப்பட்டனர்)

(iv) ஒவ்வொரு பழமொழியும் பொருட் செறிவு ..... (மிகுந்தது / மிகுந்தவை)

www.ikedu.lk

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) அறம்செய விரும்பு என்றார் ஔவைப் பாட்டி

(ii) போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்

7. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) விடாமுயற்சியாற் பயன் உண்டு

.....

(ii) கோபம் சிந்தனைக்கு இடையூறு

.....

8. பின்வரும் வாக்கியத்தை இறந்த காலத்தில் எழுதுக.

பறவைகள் கூடு நோக்கிப் பறக்கின்றன.

.....

9. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

இடம் + பற்றாக்குறை = ...

10. பின்வருவனவற்றின் உள்ளீட்டு மரபுப் பெயர்களை எழுதுக.

(i) நெல் : .....

(ii) கற்றாளை : .....

Tamil Gr 5 Exam 09 (2022) ஒன்பதாம் நாள்

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

வானில் அங்குமிங்கும் பறந்து திரியும் பறவைகளின் கானம் சூழலை இனிமையாக்குகிறது. மெல்லிய குளிர்காற்று மேனியைச் சில்லிட வைக்கிறது. தோட்டத்துப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன. வண்ணத்துப் பூச்சிகள் தேனைப் பருகப் பூக்களை நாடி வருகின்றன. முத்துக்கள் போன்ற பனித்துளிகள் இலைகளில் படிந்திருக்கும் காட்சி மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது. இளஞ்சூரியனின் பொன்னொளிபட்டு உலகு ஒளிமயமாகிறது.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) எது சூழலை இனிமையாக்குகிறது? : .....

(ii) வண்ணத்துப் பூச்சிகள் பூக்களை நாடி வரக் காரணம் யாது?

: .....

(iii) முத்துக்களுக்கு ஒப்பாகக் கூறப்பட்டவை எவை? : .....

(iv) இணைமொழி ஒன்றினைத் தருக. : .....

(v) இன்பம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. : .....

(vi) உலகு எதனால் ஒளிமயமாகிறது?

: .....

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

2. உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) உண்டான் (2) பாடியது (3) ஆடுகின்றனர்

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

எமது / வளர்ச்சி / பொது அறிவு / பத்திரிகைகள் / அடைகிறது / வாசிப்பதால்

.....

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு **சரியாயின்** (✓) எனவும் **பிழையாயின்** (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் அடையாளமிடுக.

(i) குளத்திலே மீன்கள் நீந்துகின்றன. (.....)

(ii) மின்சாரம் தடைப்பட்டதால் மின் விளக்குகள் அணைந்தன. (.....)

(iii) சிறிய சிறிய அருவிகளின் பாய்ச்சல் அழகாக இருந்தன. (.....)

(iv) நட்சத்திரங்கள் வானத்தை அலங்கரித்தது. (.....)

5. (i) பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கிட்டாதாயின் ..... மற

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கூடிய ஆசை துன்பத்தைத் தரும்

.....

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஆசிரியர் மாணவர்களுக்கு (அறிவுரை / அரிவுரை) கூறினார்.

(ii) கழிவு நீர் தேங்கி நின்றதால் (துர்னாற்றம் / துர்நாற்றம்) வீசியது.

(iii) களைகள் பயிர்களுக்கு (ஊரு / ஊறு) விளைவிக்கும்.

8. பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

சூரியன் உதயமாகிறது.

.....

9. பின்வருவனவற்றின் இளமைப் பெயரை எழுதுக.

(i) பயிர் : ..... (ii) வேம்பு : .....

10. 'நேர்பட ஒழுகு' என்னும் ஆத்திசூடியின் பொருளை எழுதுக.

.....

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

Tamil Gr 5 Exam 10 (2022) பத்தாம் நாள்

கிராமம் முழுவதும் கடும் வறட்சி நிலவியது. காட்டு மரம் செடி கொடிகள் யாவும் கருகிக் கிடந்தன. விட்டுவிட்டு வீசுகின்ற அனல் காற்றினால் மக்கள் அவதிப்பட்டனர். கிராமத்தினூடாகப் பாய்ந்து சென்ற ஆறும் வற்றிவறண்டு போயிற்று. கிராமவாசிகளுக்குக் குடிப்பதற்குத் தானும் ஒரு துளி நீரும் கிடைக்கவில்லை. மிருகங்கள் தமக்குச் சௌகரியமான இடங்களை நோக்கிச் சென்றன. மூத்த கிராமவாசிகள் தமது சொந்த இடங்களை விட்டுத் தாமும் போக நேரிடுமோ என்று அஞ்சி அஞ்சிக் காலங் கழித்தனர்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) மரம் செடி கொடிகள் கருகிக் கிடந்தமைக்குக் காரணமான இயற்கை இயல்பு எது?
: .....

(ii) மக்கள் எதனால் அவதிப்பட்டனர்? : .....

(iii) இணைமொழி ஒன்றினைத் தருக. : .....

(iv) 'இளைய' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. : .....

(v) மிருகங்கள் எவ்வாறான இடங்களை நோக்கிச் சென்றன? : .....

(vi) சொந்த இடங்களை விட்டுப் போக நேரிடுமோ என்ற அச்சத்துடன் இருந்தவர்கள் யார்?
: .....

2. (i) அ.றிணைப் பன்மை நிகழ்கால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) பாடின (2) உண்கின்றனர் (3) கூவுகின்றன.

(ii) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) பெற்றோர் (2) நாங்கள் (3) அவை

3. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) வாகை சூடுதல் : .....

(ii) நட்டாற்றில் விடல் : .....

4. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) அங்குள்ள சிற்பங்களைத் தொடவேண்டாம் என்று காவலாளி கூறினான்

(ii) திங்கள் புதன் வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும்

5. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

நகரங்களுள் / ஒன்றாகும் / இலங்கையின் / அநுராதபுரமும் / பழைமையான

.....

.....

www.lkedu.lk

6. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) மரத்திலிருந்து மாங்காய்கள் ..... (விழுந்தது / விழுந்தன)

(ii) மண்டபம், பல வண்ணக் கொடிகளால் ..... (அலங்கரிக்கப்பட்டிருந்தது / அலங்கரிக்கப்பட்டிருந்தன)

(iii) ஒவ்வொரு மலரும் ..... (அழகானது / அழகானவை)

7. பின்வரும் தொடர் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.

ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : .....

8. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஆராட்ச்சி / ஆராய்ச்சி

(ii) பன்னிரண்டு / பன்னிரெண்டு

9. பின்வரும் வினாக்களுக்கு உரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களில் எத்தனை குறில் எழுத்துக்கள் உள்ளன?

: .....

(ii) தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை? : .....

10. பின்வரும் பிராணியின் ஆணுக்குரிய மரபுப் பெயரை எழுதுக.

சிங்கம் : .....



"எதிர்கால மகிழ்ச்சிக்கு
கல்வியே ஆதாரம்"

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

தமிழ் 2022 விடைகள்

Tamil Gr 5 Exam 01 (2022) முதலாம் நாள்

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	விவசாயிகள்	01 புள்ளி
	(ii)	வண்ண வண்ண	01 புள்ளி
	(iii)	வயல்	01 புள்ளி
	(iv)	விறு விறு	01 புள்ளி
	(v)	விரைகின்றனர் / வருகின்றனர் / செல்கின்றனர்	01 புள்ளி
	(vi)	கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன்	01 புள்ளி
02)	(i)	சிறக்கப்	01 புள்ளி
	(ii)	விளையும்	01 புள்ளி
03)		மேசை	01 புள்ளி
04)	(i)	அலப்பும்	01 புள்ளி
	(ii)	அலறும்	01 புள்ளி
05)	(i)	x	01 புள்ளி
	(ii)	✓	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
06)	(i)	ஊதாரி	01 புள்ளி
	(ii)	வேட்பாளர்	01 புள்ளி
07)		ஓடி ஆடி	01 புள்ளி
08)	(i)	தொழிலாளி	01 புள்ளி
	(ii)	ஆராய்ச்சி	01 புள்ளி
09)		பிள்ளை	01 புள்ளி
10)	(i)	பாணம்	01 புள்ளி
	(ii)	பணி	01 புள்ளி

Tamil Gr 5 Exam 02 (2022) இரண்டாம் நாள்

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	உணவு	01 புள்ளி
	(ii)	உடல்	01 புள்ளி
	(iii)	நாம்	01 புள்ளி
	(iv)	நோய்நொடி	01 புள்ளி
	(v)	காலை	01 புள்ளி
	(vi)	இயற்கையான	01 புள்ளி
02)	பறந்தன		01 புள்ளி
03)	அதிகாலையில் நித்திரை விட்டெழுவது நல்ல பழக்கம் ஆகும்		01 புள்ளி
04)	ஆசிரியர் "சிந்பங்களைத் தொடவேண்டாம்" என்று கூறினார்.		01 புள்ளி
05)	(i)	✓	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
	(iv)	x	01 புள்ளி
06)	(i)	பழைமை (கோடிட வேண்டும்.)	01 புள்ளி
	(ii)	எண்ணெய் (கோடிட வேண்டும்.)	01 புள்ளி
07)	(i)	தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்	01 புள்ளி
	(ii)	அளவறிந்து	01 புள்ளி
08)	(i)	முன்னுரை	01 புள்ளி
	(ii)	போலி	01 புள்ளி
09)	(i)	பேச்சை விரித்தல்	01 புள்ளி
	(ii)	உற்சாகப்படுத்துதல்	01 புள்ளி
10)	அரசி நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தாள்.		01 புள்ளி

Tamil Gr 5 Exam 03 (2022) மூன்றாம் நாள்

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	கங்கைக்கரை	01 புள்ளி
	(ii)	ஐயாயிரம்	01 புள்ளி
	(iii)	பகைவரை	01 புள்ளி
	(iv)	நல்லநல்ல	01 புள்ளி
	(v)	திசை	01 புள்ளி
	(vi)	உரைத்தான்	01 புள்ளி
02)	படித்தார்கள்		01 புள்ளி
03)	மகாத்மா காந்தி சத்தியத்தைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வரலாற்றில் இடம் பிடித்தார்.		01 புள்ளி
04)	"கல்விக்கு அழகு கசடற மொழிதல்" என்றனர் நம் முன்னோர்.		01 புள்ளி
05)	(i)	நாகரிகம்	01 புள்ளி
	(ii)	புடைவை	01 புள்ளி
06)	(i)	ஓர் உதாரணமே போதும் / ஓர் உதாரணம் போதும்	01 புள்ளி
	(ii)	வெள்ளம்	01 புள்ளி
07)	(i)	குழியும்	01 புள்ளி
	(ii)	புகழும்	01 புள்ளி
08)	(i)	பட்டிமன்றம்	01 புள்ளி
	(ii)	பன்னசாலை / பர்ணசாலை	01 புள்ளி
09)	மரத்தினது வேர்கள் நீரை நாடிச் சென்றன.		01 புள்ளி
10)	(i)	x	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி

Tamil Gr 5 Exam 04 (2022) நான்காம் நாள்

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	பல வர்ண மின்விளக்குகள்	01 புள்ளி
	(ii)	காலி முகத்திடலில்	01 புள்ளி
	(iii)	தாரகைகள்	01 புள்ளி
	(iv)	அங்கும் இங்கும்	01 புள்ளி
	(v)	மாலை / மாலைப்பொழுது	01 புள்ளி
	(vi)	கடல் நீரும் நீலவானும் கைகோர்க்கும் காட்சியினை	01 புள்ளி
02)	நூலகத்திலுள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.		01 புள்ளி
03)	(i)	பருந்து வானத்தில் வட்டமிடும்.	01 புள்ளி
	(ii)	சிறுவர்கள் கடற்கரைக்குச் சென்று பட்டம் விடுவார்கள்.	01 புள்ளி
04)	(i)	காலி நகருக்குள் நுழைந்ததுமே இரண்டு அம்சங்களை எங்களால் காண முடிந்தது	01 புள்ளி
	(ii)	ஆத்திசூடி நல்ல பல கருத்துக்களைக் கூறுகின்ற ஒரு நூலாகும்.	01 புள்ளி
05)	"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார்.		01 புள்ளி
06)	(i)	சொன்ன சொல் தவறுதல்.	01 புள்ளி
	(ii)	ஆசைப்படுதல்.	01 புள்ளி
07)	(i)	✓	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	x	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
08)	மானத்துடன் வாழ வேண்டும்.		01 புள்ளி
09)	(i)	ஓடி ஆடி	01 புள்ளி
	(ii)	இன்ப துன்ப	01 புள்ளி
10)	இந்த மாம்பழம் மிகவும் சுவையாக இருக்கின்றது.		01 புள்ளி

Tamil Gr 5 Exam 05 (2022) ஐந்தாம் நாள்


வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	கோழிக்குஞ்சுகள் / அழகான கோழிக்குஞ்சுகள்	01 புள்ளி
	(ii)	அங்குமிங்கும்	01 புள்ளி
	(iii)	பசுத்தோல் போர்த்த புலி போல	01 புள்ளி
	(iv)	சத்தமிட்டன	01 புள்ளி
	(v)	சிறகுகள் / சிறகுகளை / தோல்	01 புள்ளி
	(vi)	(3) கீரி புல்வெளியில் உலவித் திரிந்தது. (கோடிட வேண்டும்)	01 புள்ளி
02)	நான் கடைக்குச் சென்று புத்தகம் வாங்கினேன்.		01 புள்ளி
03)	ஆத்திசூடியானது எவ்வயதுச் சிறுவர்களும் மனனம் செய்யக்கூடிய வகையில் சிறுசிறு சொற்றொடர்களாக அமைந்துள்ளது.		01 புள்ளி
04)	(i)	நாங்கள் வீட்டிற்குப் போகிறோம்.	01 புள்ளி
	(ii)	அவர்கள் எனது புதிய புத்தகத்தை வாங்கினார்கள்.	01 புள்ளி
05)	மலரவா, நீ வீட்டு வேலைகளைச் செய்தாயா?		01 புள்ளி
06)	(i)	அலைக்கழித்தல்	01 புள்ளி
	(ii)	புண்படுத்தல்	01 புள்ளி
07)	(i)	✓	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	x	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
08)	ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.		01 புள்ளி

09)	(i)	மீன்கள் நீரில் வாழும்.	01 புள்ளி
	(ii)	பசுக்கள் பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைத் தரும்.	01 புள்ளி
10)	(i)	வாழ்	01 புள்ளி
	(ii)	இணங்கு	01 புள்ளி

Tamil Gr 5 Exam 06 (2022) ஆறாம் நாள்

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	(2) மாலைப்பொழுது (கோடிட வேண்டும்)	01 புள்ளி
	(ii)	குளிர்காற்று	01 புள்ளி
	(iii)	அலைகள்	01 புள்ளி
	(iv)	வரைந்த	01 புள்ளி
	(v)	சிலுசிலு	01 புள்ளி
	(vi)	விளையாடிக்கொண்டிருந்தார்கள்	01 புள்ளி
02)	முதலாம் தவணைப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.		01 புள்ளி
03)	(i)	நான் வீட்டில் இருந்தேன்.	01 புள்ளி
	(ii)	குமார் மைதானத்திற்குச் சென்று கரப்பந்து விளையாடினான்	01 புள்ளி
04)	சந்தைகள், பூங்காக்கள், வைத்தியசாலை என்பன பொதுச்சொத்துக்கள் ஆகும்.		01 புள்ளி
05)	(i)	இன்றைய உலகில் மனிதர்கள் அனைவரும் பணம் சம்பாதிக்கவே விரும்புகின்றனர்.	01 புள்ளி
	(ii)	இலவசமாக வழங்கப்படும் புத்தகங்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை ஆகும்.	01 புள்ளி
06)	(i)	x	01 புள்ளி
	(ii)	✓	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
07)	(i)	உற்சாகப்படுத்துதல்	01 புள்ளி
	(ii)	ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்	01 புள்ளி
08)	இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை		01 புள்ளி

09)	(i)	அங்குமிங்கும்	01 புள்ளி
	(ii)	குப்பை கூளங்களை	01 புள்ளி
10)	தங்கைமார் மாலையில் கடற்கரையில் விளையாடினார்கள்		01 புள்ளி




ரம் நாள் தமிழ் விடைகள்

01) (i) விளையாட்டு மைதானத்திற்கு
(ii) யாழ் வாசிப்பது போல்
(iii) மட்டற்ற
(iv) பிரதானமிடம்
(v) இனிய இலவு நண்பனை
(vi) உயர உயர

02) (அ) மானுடன்

03) எண்ணம் சொற்கள் செயல் ஒரு ஒருமையான இலக்கை நோக்கி ஒன்றாகப்படி நிற்பதை செய்துள்ளோம்.

04) (இடபுல வியலாளர் என்ற புலவர் உணர்வைப்பற்றி நிலத்தோடு தீரே என்றார்.



05) (i) x
(ii) ✓
(iii) x
(iv) x

06) (i) வாழ்வே
(ii) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு (பேராசை பெரு நட்டம்)

07) (i) இரை
(ii) கடமை

08) (i) குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
(ii) எதிர்த்துப் போராடுதல்

09) (i) வரவு செலவு
(ii) உற்றார் உறவினர்

10) அவன் பின்தில் வாங்கினான்.

எல்லாவற்றும் 1 புள்ளி வீதம் மொத்தம் (22 புள்ளிகள்)

8 ஆம் நாள் விடைகள் தமிழ்

1.	(i)	பறவைகள்	(1 புள்ளி)
	(ii)	நீரருந்துவதற்காக	(1 புள்ளி)
	(iii)	தெளித்து விட்ட வண்ணக் கலவை போல	(1 புள்ளி)
	(iv)	வனப்பு	(1 புள்ளி)
	(v)	இயற்கை	(1 புள்ளி)
	(vi)	குளிர்காற்று	(1 புள்ளி)
2.	(i)	உளவு	(1 புள்ளி)
	(ii)	சிவப்பு	(1 புள்ளி)
3.	(2)	ஒடுகின்றன	(1 புள்ளி)
4.	உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் உலவுவது உடம்புக்கு நல்லது.		(1 புள்ளி)
5.	(i)	கூவியது	(1 புள்ளி)
	(ii)	அசைந்தன	(1 புள்ளி)
	(iii)	துன்பப்படுவர்	(1 புள்ளி)
	(iv)	மிகுந்தது	(1 புள்ளி)
6.	(i)	"அறம்செய விரும்பு" என்றார் ஔவைப் பாட்டி.	(1 புள்ளி)
	(ii)	போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்?	(1 புள்ளி)
7.	(i)	அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்	(1 புள்ளி)
	(ii)	ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு	(1 புள்ளி)
8.	பறவைகள் கூடு நோக்கிப் பறந்தன.		(1 புள்ளி)
9.	இடப்பற்றாக்குறை		(1 புள்ளி)
10.	(i)	அரிசி	(1 புள்ளி)
	(ii)	சோறு	(1 புள்ளி)

www.lkedu.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

9 ஆம் நாள் விடைகள் தமிழ்

1.	(i) பறவைகளின் கானம்	(1 புள்ளி)
	(ii) தேனைப் பருக	(1 புள்ளி)
	(iii) பனித்துளிகள்	(1 புள்ளி)
	(iv) அங்குமிங்கும்	(1 புள்ளி)
	(v) மகிழ்ச்சி	(1 புள்ளி)
	(vi) இளஞ்சூரியனின் பொன்னொளிபட்டு	(1 புள்ளி)
2.	(1) உண்டான்	(1 புள்ளி)
3.	பத்திரிகைகள் வாசிப்பதால் எமது பொது அறிவு வளர்ச்சி அடைகிறது.	(1 புள்ளி)
4.	(i) ✓	(1 புள்ளி)
	(ii) ✓	(1 புள்ளி)
	(iii) ×	(1 புள்ளி)
	(iv) ×	(1 புள்ளி)
5.	(i) வெட்டென	(1 புள்ளி)
	(ii) பேராசை பெரு நட்டம்	(1 புள்ளி)
6.	மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும்.	(1 புள்ளி)
7.	(i) அறிவுரை	(1 புள்ளி)
	(ii) துர்நாற்றம்	(1 புள்ளி)
	(iii) ஊறு	(1 புள்ளி)
8.	சூரியன் உதயமாகும்.	(1 புள்ளி)
9.	(i) நாற்று	(1 புள்ளி)
	(ii) கன்று	(1 புள்ளி)
10.	ஒழுக்கம் தவறாமல் நேர்வழியில் நட	(1 புள்ளி)

10 ஆம் நாள் விடைகள் தமிழ்

1.	(i) வறட்சி	(1 புள்ளி)
	(ii) அனல் காற்றினால்	(1 புள்ளி)
	(iii) வற்றிவறண்டு	(1 புள்ளி)
	(iv) மூத்த	(1 புள்ளி)
	(v) சௌகரியமான	(1 புள்ளி)
	(vi) மூத்த கிராமவாசிகள்	(1 புள்ளி)
2.	(i) (3) கூவுகின்றன	(1 புள்ளி)
	(ii) (1) பெற்றோர்	(1 புள்ளி)
3.	(i) வெற்றி அடைதல்	(1 புள்ளி)
	(ii) ஆபத்தில் கைவிடல்	(1 புள்ளி)
4.	(i) "அங்குள்ள சிற்பங்களைத் தொடவேண்டாம்" என்று காவலாளி கூறினாள்.	(1 புள்ளி)
	(ii) திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும்.	(1 புள்ளி)
5.	இலங்கையின் பழமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும்.	(1 புள்ளி)
6.	(i) விழுந்தன	(1 புள்ளி)
	(ii) அலங்கரிக்கப்பட்டிருந்தது	(1 புள்ளி)
	(ii) அழகானது	(1 புள்ளி)
7.	சகபாடி	(1 புள்ளி)
8.	(i) ஆராய்ச்சி	(1 புள்ளி)
	(ii) பன்னிரண்டு	(1 புள்ளி)
9.	(i) ஐந்து / 5	(1 புள்ளி)
	(ii) இருநூற்று நாற்பத்தேழு / 247	(1 புள்ளி)
10.	ஏறு	(1 புள்ளி)

www.lkedu.